# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1653/19 - 2010 මැයි 12 වැනි බදාදා - 2010.05.12

*1653/19 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 12/2008.*

**2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படுவதான 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் விதப்புரையின் மேல் ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்களின் கவனிப்பு மற்றும் புனர்வாழ்வளித்தலுக்கென சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல் நிலையங்களாகவிருத்தற்கென இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் இடங்களை இக்கட்டளைமூலம் பெயர்குறிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2010, மே 04.

**அட்டவணை**

**சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல் நிலையங்கள்**

1. பல்லேகெல
2. வட்டறக்க
3. தல்தென
4. வீரவில
5. அநுராதபுரம்
6. பல்லென்சேன
7. கன்தவத்த
8. மீதிரிகல

5- 677/1

ச.வ.பி.12/2008.

**2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) சட்டம்**

அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படுவதான 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2010, மே 04.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (தனியார் சிகிச்சையளித்தல் நிலையங்களுக்கான உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி, அத்தகைய நோக்கத்திற்கென உரிமமொன்றைப் பெற்றிருந்தாலொழிய, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்களுக்கான கவனிப்பு மற்றும் புனர்வாழ்வை ஏற்பாடு செய்கின்ற நோக்கத்திற்கென தனியார் சிகிச்சையளித்தல் நிலையமொன்றைத் தாபித்தலாகாது.

3. ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்களின் கவனிப்பு மற்றும் சிகிச்சையளித்தலுக்கென தனியார் சிகிச்சையளித்தல் நிலையமொன்றைத் தாபிப்பதற்கு உத்தேசிக்கின்ற எவரேனும் ஆள் (இதனகத்துப்பின்னர் "தே. அ. ஔ. க. ச." எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஐயாயிரம் ரூபா விண்ணப்பக் கட்டணமொன்றுடன் சேர்த்து இதற்கான அட்டவணை I இன் படிவம் 1 இல் தரப்பட்ட மாதிரியில், எழுத்தில் உரிமமொன்றுக்கென விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:

ஆயின், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற திகதிக்கு முன்னதாக ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்களின் கவனிப்பு மற்றும் புனர்வாழ்வளித்தலுக்கென தனியார் சிகிச்சையளித்தல் நிலையமொன்றை ஏற்கனவே தாபித்துள்ள எவரேனும் ஆள் இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஆறு மாதங்களினுள் அத்தகைய காணப்படும் தனியார் சிகிச்சையளித்தல் நிலையத்தைத் தொடர்ந்து பேணுவதற்கான உரிமமொன்றுக்கென ஓராயிரம் ரூபா விண்ணப்பக் கட்டணமொன்றுடன் சேர்த்து இதற்கான அட்டவணை I இன் படிவம் I இல் தரப்பட்ட மாதிரியால் தே. அ. ஔ. க. சபைக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

4. (1) விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகியுள்ளார் என தே. அ. ஔ. க. ச. திருப்தியடைந்ததன் பின்னர், ஐயாயிரம் ரூபா உரிமக் கட்டணமொன்றின் கொடுப்பனவின் மேல், தனியார் சிகிச்சையளித்தல் நிலையமொன்றாக விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் அதிகாரமளிக்கின்ற உரிமமொன்றை விண்ணப்பமொன்றின் பெறுகைத் திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் அத்தகைய விண்ணப்பதாரருக்கு வழங்கலாம்.

(2) இவ்வொழுங்குவிதியின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்று, அத்தகைய உரிமம் வழங்கிய திகதியிலிருந்து இரண்டாண்டு காலப்பகுதியொன்றுக்கு வலுவிலிருத்தல் வேண்டும். உரிமங்கோரிய ஒருவர் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றின் காலாவதி திகதிக்கு ஒரு மாதம் முன்னர் இதற்கான அட்டவணை I இன் படிவம் 2 இல் தரப்பட்ட மாதிரியில் தே. அ. ஔ. க. சபைக்கு எழுத்தில் ஒவ்வொரு இரண்டாண்டிற்கும் அத்தகைய உரிமத்தின் புதுப்பித்தலுக்கென விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(3) இவ்வொழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஐநூறு ரூபா கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) தே. அ. ஔ. க. ச உரிமமொன்றின் புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்றில் உரிமங்கோரியவரினால் கொடுத்துதவப்பட்ட தகவலுடன் திருப்தியடைந்ததன் பின்னர் அத்துடன் இரண்டாயிரம் ரூபா புதுப்பித்தல் கட்டணமொன்றின் கொடுப்பனவின் மீது அத்தகைய விண்ணப்பத் திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் இன்னொரு இரண்டாண்டு காலத்திற்கென உரிமமொன்றை வழங்கலாம்.

5. (1) நாலாம் ஒழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று -

(அ) எந்த ஏதேனும் நிபந்தனைகளுக்கு அமைவாக அத்தகைய உரிமம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த நிபந்தனைகள் உரிமங்கோரியவரினால் மீறப்படுமிடத்து ;

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பமொன்றில் கொடுக்கப்பட்ட ஏதேனும் தகவல் பொய்யானதாக அல்லது சரியற்றதாக இருப்பதாகக் காணப்படுமிடத்து

தே. அ. ஔ. க. சபையினால் இரத்துச் செய்யப்படலாம்.

(2) தே. அ. ஔ. க. ச. 3 ஆம் ஒழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் இரத்துச் செய்தலுக்கு முன், ஏன் அத்தகைய உரிமம் இரத்துச் செய்யப்படக்கூடாது என்பது பற்றி காரணங்காட்டுமாறு உரிமங்கோரியவருக்கு சந்தர்ப்பமொன்று வழங்கப்படுதல் வேண்டும். இவ்வொழுங்குவிதிகளின் கீழான உரிமமொன்றின் ஏதேனும் இரத்துச் செய்தல் உரிமங்கோரியவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், இவ்வொழுங்குவிதிகளின் கீழ் எந்த ஆளினது உரிமம் இரத்துச் செய்யப்படக் காரணமான மீறுகை சீர்படுத்தப்பட்டுள்ளது என தே. அ. ஔ. க. சபையின் திருப்திக்கு எண்பித்தால் அத்தகைய இரத்துச் செய்தலின் திகதியிலிருந்து ஓராண்டுக்குப் பின்னர் புதிய உரிமமொன்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

## அட்டவணை I

படிவம் 1

தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை
இல. 383, கொட்டா வீதி,
ராஜகிரிய.

2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர்வாழ்வளித்தலும்) சட்டம்
உரிமம்பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம்

பாகம் I

விண்ணப்பதாரரின் விவரங்கள்

1. விண்ணப்பதாரரின் பெயர் : ------------------------------------------------------------

------------------------------------------------------------

2. விண்ணப்பதாரரின் முகவரி : ------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

3. தே. அ. அ. இல. : ------------------------------------------------------------

வியாபாரப் பதிவு இல./என் (தனியார்) இல. : ------------------------------------------------------------

4. தொலைபேசி இல. : ----------------------------------------

5. தொலைநகல் இல. : ----------------------------------------

6. மின்னஞ்சல் இல. : ----------------------------------------

7. சிகிச்சை நிலையத்தின் முகவரி : ------------------------------------------------------------

------------------------------------------------------------

8. நிலையத்தில் உறைவிடமளிக்கக்கூடிய வாடிக்கையாளர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை

9. சிகிச்சை நிலையத்திற்கென பயன்படுத்தப்படும் காணியின் விஸ்தீரணம் : ஏ. நூ. பே.

10. பின்வருவன நிறைவேற்றப்பட்டிருப்பின் "√" எனவும் இல்லையெனில் "X" எனவும் குறிப்பிடுக.

10.1 கட்டிடம் காணியின் 70% மேற்படாததை உள்ளடக்க வேண்டும்.

10.2 விளையாட்டு பொழுதுபோக்குமிடம் காணியின் 20 % ஆக இருத்தல் வேண்டும்.

10.3 தோட்ட இடம் காணியின் 10% ஆக இருத்தல் வேண்டும்.

10.4 மின்சாரம்

10.5 நீர்விநியோகம்

10.6 முறையான வடிகாலமைப்பு முறைமை

10.7 ஆண்/பெண் இருபாலாருக்கும் தனியாக தூங்குமிடம்

10.8 சமையலறைக்கான புறம்பானஇடம் :

10.9 ஒரு கழிவறை, குழியலறை வசதிகள் (8க்கு மேற்படாத ஆட்களுக்கு ஒரு கழிவறை மற்றும் ஒரு குளியலறை)

10.10 புறம்பான சாப்பாட்டிடம்

10.11 குழு கூடுதல் கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளுக்கான புறம்பான இடம் :

10.12 தனிப்பட்ட அல்லது குழு ஆலோசனைக்கான புறம்பான இடம்

10.13 சிகிச்சை நிலையத்திற்கான பணிப்பாளரின் அலுவலகத்திற்கான புறம்பான அறை

10.14 பணியாட்டொகுதியினருக்கான அலுவலக இடம்

10.15 பணியாட்டொகுதியினருக்கான வதிவிட வசதிகள்

10.16 முறையான களஞ்சிய இடப்பரப்பு

10.17 ஒருபடுக்கையிடத்திற்கு ஆகக் குறைந்தது 2 சதுர மீற்றர்

10.18 படுக்கைகள் 70 சென்றி மீற்றரைவிட குறைவாக இருத்தலாகாது

10.19 ஆளுக்கு ஆகக் குறைந்தது ஒரு அடுக்குப்பெட்டி

10.20 சாப்பாட்டு மேசைகள் மற்றும் கதிரைகள்

10.21 அலுவலக தளபாடங்கள்

10.22 குளிரூட்டி

10.23 சமையல்/சாப்பிடுவதற்கான கருவிகள் ☐

10.24 தொலைக்காட்சி/வானொலி ☐

10.25 அடிப்படை படுக்கைப் பொருட்கள் ☐

10.26 அலுவலக காகிதாதிகள் ☐

10.27 வாசிப்பு புத்தகங்கள் ☐

10.28 சேவை வாகனம் ☐

10.29 அடிப்படை தோட்டமும் பராமரிப்பு கருவிகளும் ☐

11. சிகிச்சை நிலையத்தில் பின்வரும் பதவிகளுக்கு அலுவலர்கள் இருப்பின் பெட்டியில் "√" என குறியீட்டு அலுவலர்களின் எண்ணிக்கையையும் தருக. உதாரணம் ஆலோசகர் : √ 2

பணிப்பாளர் ☐

ஆலோசகர் ☐

உதவி ஆலோசகர் ☐

ஆலோசனை உதவியாளர்கள் ☐

தாதி ☐

வாழ்க்கைத் தொழில்சார் அறிவுறுத்தல்கள் ☐

12. பணியாட்டொகுதியினரின் தகைமைகள் : அலுவலர்கள் தரப்பட்ட தகைமைகளைக் கொண்டிருப்பின் பெட்டியில் "√" என குறிப்பிடுக.

12.1 சிகிச்சை நிலைய பணிப்பாளர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திட மிருந்து சமூக விஞ்ஞானம்/முகாமைத்துவத்தில் பட்டமொன்றுடன் 05 ஆண்டுகள் முகாமைத் துவ அனுபவம் ☐

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்லைக்கழகமொன்றிட மிருந்து ஔடத துஷ்பிரயோக முகாமைத்துவ கற்கைகளில் திப்புளோமாவுடன் நிர்வாக மற்றும் சிகிச்சை நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தில் 8 ஆண்டுகள் அனுபவம் ☐

க. பொ. த. (உ/த.) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி உடன் நிர்வாகம் மற்றும் சிகிச்சை நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தில் 10 ஆண்டுகள் அனுபவம் ☐

கணிதம், சிங்களம் மற்றும் ஆங்கில பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஒரே தடவையில் க. பொ.த. (சா/த) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி உடன் நிர்வாகம் மற்றும் சிகிச்சை நிகழ்ச்சித் திட்டம் முகா மைத்துவத்தில் 15 ஆண்டுகள் அனுபவம் ☐

*12.2 ஆலோசகர் :*

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிட மிருந்து சமூக விஞ்ஞானத்தில் பட்டமொன்றுடன் 03 ஆண்டுகள் ஆலோசனை சேவைகளில் அனுபவம்.* ☐

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகமொன்றிட மிருந்து ஔடத துஷ்பிரயோக முகாமைத்துவ கற்கைகளில் திப்புளோமாவுடன் 5 ஆண்டுகள் ஆலோசனை சேவைகளில் அனுபவம்.* ☐

*திப்புளோமா சமூக வேலை உடன் 8 ஆண்டுகள் ஆலோசனை சேவையில் அனுபவம்* ☐

*ஒரே தடவையில் க. பொ. த. (உ/த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி யுடன் ஆலோசனை சேவையில் 10 ஆண்டுகள் அனுபவம்.* ☐

*கணிதம், சிங்களம் மற்றும் ஆங்கில பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஒரே தடவையில் க. பொ. த. (சா/த) பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியுடன் ஆலோசனை சேவையில் 15 ஆண்டுகள் அனுபவம்.* ☐

*12.3 உதவி ஆலோசகர் :*

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றி லிருந்து சமூக விஞ்ஞானத்தில் பட்டமொன்றுடன் ஆலோசனை சேவையில் ஓராண்டு அனுபவம்.* ☐

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றி லிருந்து ஔடத துஷ்பிரயோக முகாமைத்துவ கற்கைகளில் திப்புளோமா ஒன்றுடன் ஔடத துஷ் பிரயோக துறையில் 3 ஆண்டுகள் அனுபவம்* ☐

*சமூக வேலை திப்புளோமாவுடன் ஔடத துறையில் 5 ஆண்டுகள் அனுபவம்* ☐

*ஒரே தடவையில் க. பொ. த. (உ./த.) பரீட்சையில் 3 பாடங்கள் சித்தி உடன் ஔடத துஷ்பிரயோக துறையில் 8 ஆண்டுகள் அனுபவம்.* ☐

*.கணிதம், சிங்களம் மற்றும் ஆங்கில பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஒரே தடவையில் க. பொ.த. (சா./த.) பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியுடன் ஔடதத் துஷ்பிரயோக துறையில் 10 ஆண்டுகள் அனுபவம்.* ☐

*12.4 ஆலோசனை உதவியாளர்கள் :*

*பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிடமிருந்து ஔடத துஷ்பிரயோக முகாமைத்துவக் கற்கைகளில் துஷ்பிரயோக திப்புளோமா உடன் ஔடத துறை யில் ஓராண்டு அனுபவம்* ☐

*சமூக வேலை திப்புளோமா உடன் ஔடத துஷ்பிரயோக துறையில் 3 ஆண்டுகள் அனுபவம்.* ☐

*ஒரே தடவையில் க. பொ. த. (உ./த.) பரீட்சையில் 3 பாடங்கள் சித்தி உடன் ஔடத துஷ்பிரயோக துறையில் 5 ஆண்டுகள் அனுபவம்* ☐

*கணிதம், சிங்களம் மற்றும் ஆங்கில பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஒரே தடவையில் க. பொ. த (சா./த.) பரீட்சையில் 6 பாடங்கள் சித்தி உடன் ஔடத துஷ்பிரயோக துறையில் 8 ஆண்டுகள் அனுபவம்.* ☐

12.5 தாதிகள் :

கணிதம், சிங்களம் மற்றும் ஆங்கில பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஒரே தடவையில் க. பொ. த. (சா/த) பரீட்சையில் 6 பாடங்கள் சித்தி ☐

அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனத்திடமிருந்து தாதிச் சான்றிதழ் ☐

அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனத்திடமிருந்து தாதிச் சேவையில் 2 ஆண்டுகள் அனுபவம் ☐

12.6 வாழ்க்கைத் தொழில்சார் அறிவுறுத்துநர்

கணிதம், சிங்களம் மற்றும் ஆங்கில பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஒரே தடவையில் க. பொ. த. (சா/த) பரீட்சையில் 6 பாடங்கள் சித்தி ☐

வாழ்க்கைத் தொழில்சார் பயிற்சி மீதான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து சான்றிதழ் ☐

தோதான துறையில் 2 ஆண்டுகள் அனுபவம் ☐

13. எத்தகைய சிகிச்சை முறைமைகள் சிகிச்சை நிலையங்களில் பின்பற்றப்படுகிறது/பின்பற்றப்பட வேண்டும். வேறேதேனும் முறைமை பயன்படுத்தப்படின், தயவு செய்து கீழே குறிப்பிடுக?

உளவியல்சார் மாதிரி ☐

பிணி நீக்கும் கலைசார் சமூகம் ☐

பல்துறை மாதிரி ☐

பர்த்- அடிப்படையிலான மாதிரி ☐

உடல் பௌதீக மாதிரி ☐

பாரம்பாரிய மாதிரி ☐

............................................. ☐

............................................. ☐

............................................. ☐

14. சிகிச்சை நிலையத்தில் வாடிக்கையாளருக்கு பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டிருப்பின்/வழங்கப்படவேண்டியிருப்பின் பெட்டியில் "√" எனக் குறிப்பிடுக.

14.1 மருத்துவ/மருத்துவப் பயிற்சி ☐

தேவைப்படும்போது மருத்துவ/ உளசார் நிபுணர் ஒருவரின் சேவை வழங்கப்படும் என்பதுடன் வாடிக்கையாளரின் உட ல்சார்/ உளசார் நிலையைத் தீர்மானிப்பதற்கு இயலுமாகவிருத்தல்

14.2 சக்தி ☐

வாடிக்கையாளரின் தேவைகளின் பாகமாக திட்டமிடப்பட்ட உணவு

14.3 எச். ஐ. வி. கெப். பி/சி/ எஸ். ரி. டி. ☐

மேற்தரப்பட்ட நோய்களுக்காக வாடிக்கையாளர்களைச் சோதித்தலும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்தலும்.

14.4 ஆத்மீகம் ☐

சமயசார் கல்வி வழங்குதலும் அதன்படி செயற்பட வாடிக்கையாளர்களை ஊக்குவித்தலும்

14.5 குடும்ப சேவைகள் ☐

குடும்ப ஆலோசனை சேவைகளை வழங்கல்

14.6 மீண்டும் தவறிழைத்தலைத் தடுத்தல்
அதிகூடிய நட்டவக்க சூழ்நிலைகளையும் ஔடத பாவனைக்கு இட்டுச் செல்லும் தொடக்க புள்ளிகளையும் அடையாளங்காணுவதற்கு வாடிக்கையாளர்களுக்கு கற்பித்தல் ☐

14.7 பின்பான கவனிப்பு
பின்பான சேவை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் ☐

14.8 ஆலோசனை
தனிப்பட்ட மற்றும் குழு ஆலோசனை ☐

14.9 சட்ட ஆலோசனை
வாடிக்கையாளரின் சட்டத் தேவைகள் ஔடத துஷ்பிரயோகம் தொடர்புபட்ட பிரச்சினையைத் தீர்த்துவைத்தல் ☐

14.10 வாழ்க்கைத் தொழில்சார் உதவி
வாடிக்கையாளருக்கு சமூகம் சார்பான மற்றும் தொழிலிலமர்த்தக்கூடிய திறமையைக் கற்பித்தல் ☐

14.11 வாழ்க்கைக்கான திறமைப் பயிற்சி
பாரிய வாழ்க்கைத் திறமைகளை அபிவிருத்தி செய்தல் ☐

14.12 கல்வி மற்றும் தகவல்
வாழ்க்கைக்கான அடிப்படைக் கல்வி ☐

15. இடாப்புகள்/பதிவேடுகள் பின்வரும் காரணிகள் தொடர்பில் பேணப்படுகின்றன/பேணப்படவேண்டியுள்ளது எனில் "√" எனக் குறிப்பிடவும்

| | |
|---|---|
| அனுமதி | ☐ |
| சிகிச்சையை பூர்த்தி செய்யாத ஆட்கள் | ☐ |
| சிகிச்சையை பூர்த்தி செய்த ஆட்கள் | ☐ |
| ஔடதங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆட்கள் | ☐ |
| ஒவ்வொரு ஆள் தொடர்பான விடய ஆய்வு | ☐ |
| சிகிச்சையளிக்கப்பட்ட ஆட்களின் மொத்த எண்ணிக்கை | ☐ |

16. வேறொரு ஊழியர் சிகிச்சை நிலையத்தின் நிர்வாகத்திற்கான/முகாமைக்கான சிகிச்சை பணியாட்டொகுதிக்கு மேலதிகமாக சிகிச்சை நிலையத்தில் தொழிலுக்கமர்த்தப்படவேண்டுமெனில் தயவு செய்து பதவி மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையை கீழே குறிப்பிடுக.

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| ................................................................................................ | ☐ |
| ................................................................................................ | ☐ |
| ................................................................................................ | ☐ |
| ................................................................................................ | ☐ |
| ................................................................................................ | ☐ |
| ................................................................................................ | ☐ |

.

17. (அ) உரிமமொன்றுக்காக முன்னதாக விண்ணப்பித்துள்ளீரா?
(ஆ) உமது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதா?
(இ) "ஆம்" எனில் எத்தனை தடவைகள், நிராகரிப்புக்கான காரணம் யாது?

..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

18. (அ) சிகிச்சை நிலையத்திற்கென வழங்கப்பட்ட உரிமம் தே. அ. ஔ. க. சபையினால் எப்போதாவது இரத்துச் செய்யப்பட்டுள்ளதா?
(ஆ) "ஆம்" எனில், எத்தனை தடவைகள், அத்தகயை இரத்துச் செய்தலுக்கான காரணங்கள் யாவை?

..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

இவ்விண்ணப்பத்தில் அண்மையில் கொடுத்துதவப்பட்ட எல்லாத் தகவல்களும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் பிரகடனம் செய்கிறேன்.

| | | |
|---|---|---|
| .......................................... | .......................................... | .......................................... |
| திகதி | விண்ணப்பதாரரின் ஒப்பம் | சிகிச்சை நிலையத்தின் இறப்பர் முத்திரை. |

**அலுவலக உபயோகத்திற்கு :**

பெறப்பட்ட திகதி ---------------------------

சிகிச்சை நிலையத்தை பரிசோதிக்க தே. அ. ஔ. க. சபையின் (சிசிக்சை) பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் குறிப்புகள் .

------------------------------ ------------------------------
கையொப்பம். திகதி

தே. அ. ஔ. க. சபையின் (சிகிச்சை) பணிப்பாளரின் சிபாரிசு

------------------------------ ------------------------------
கையொப்பம் திகதி

அங்கீகரிக்கப்பட்டது/அங்கீகரிக்கப்படவில்லை

------------------------------ ------------------------------
தே. அ. ஔ. க. ச. தவிசாளர் கையொப்பம். திகதி

**படிவம் 2**

தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை
இல 383, கொட்டா வீதி,
இராஜகிரிய.

2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள்
(சிகிச்சையளித்தலும், புனர்வாழ்வளித்தலும்) சட்டம்.
உரிமம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்.

விண்ணப்பதாரியின் விவரங்கள்

உரிமமொன்றை மீளப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் பெயர் : ......................................................................................
......................................................................................

2. விண்ணப்பதாரரின் முகவரி : ......................................................................................
......................................................................................
......................................................................................

3. தே. அ.அ. இல. : ......................................................................................
வியாபாரப் பதிவு இல./என் (தனியார்) இல. ......................................................................................

4. தொலைபேசி இல. : ......................................................................................

5. தொலைநகல் இல. : ......................................................................................

6. மின்னஞ்சல் இல. : ......................................................................................

7. எப்போது சிகிச்சை நிலையம் முதலில் உரிமமளிக்கப்பட்டது.

| திகதி | மாதம் | ஆண்டு |
|---|---|---|
| | | |

8. கடைசியான காலப்பகுதியின் போது சிசிச்சை நிலையத்தில் சிகிச்சையளிக்கப்பட்ட ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்களின் எண்ணிக்கை : ☐

9.கடைசியான காலப்பகுதியின் போது ஔடதங்களிலிருந்து விடுவிக்கப்பட்டதாக மாறியுள்ள ஔடதங்களில் தங்கியிருந்த ஆட்களின் எண்ணிக்கை ☐

10. (அ) சிகிச்சை நிலையத்திற்கு வழங்கப்பட்ட உரிமம் தே. அ. ஔ. க . சபையினால் இரத்துச் செய்யப்பட்ட சந்தர்ப்பம் ஏதேனும் உண்டா ?

(ஆ) மேற்கூறப்பட்ட வினாவுக்கு “ஆம்” எனில் எத்தனை சந்தர்ப்பங்கள் மற்றும் காரணங்கள் :

..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

11. சிகிச்சை நிலையமானது சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாடுகளின் முரண்பாடு அல்லது மீறுகை, தே. அ. ஔ. க. சபையினால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் கட்டளை அல்லது பணிப்புகள் மற்றும் உரிமத்தில் குறிப்பிடப்பட்ட நியதி/நிபந்தனையின் முரண்பாடு அல்லது மீறுகை தொடர்பில் தே. அ. ஔ. க. சபையினால் எச்சரிக்கப்பட்ட சந்தர்ப்பம் உண்டா?

12. மேற்கூறப்பட்ட வினாவுக்கு “ஆம்” எனில் எத்தனை சந்தர்ப்பங்கள் மற்றும் காரணங்கள் :-

..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

13. பௌதிக கட்டமைப்பு, பணியாட்டொகுதி, சிகிச்சை நிகழ்ச்சித்திட்டம் அல்லது முகாமைத்துவம் தொடர்பில் சிகிச்சை நிலையத்தின் முதற்றடவையில் உரிமம் பெறப்பட்ட சூழ்நிலை மற்றும் தற்போதைய சூழ்நிலைக்குமிடையே ஏதேனும் வேறுபாடு உண்டா?

..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

14. மேற்கூறப்பட்ட வினாக்களுக்கு “ஆம்” எனில் வேறுபாட்டைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

இவ்விண்ணப்பத்தில் அண்மையில் கொடுத்துதவப்பட்ட எல்லாத் தகவல்களும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் பிரகடனம் செய்கிறேன்.

| ......................................... | ......................................... | ......................................... |
|---|---|---|
| திகதி | விண்ணப்பதாரரின் கையொப்பம். | சிகிச்சை நிலையத்தின் இறப்பர் முத்திரை. |

***அலுவலக உபயோகத்திற்கு :***

பெறப்பட்ட திகதி : -----------------------------

சிகிச்சை நிலையத்தை பரிசோதிக்க தே. அ. ஔ. க. சபையின் (சிகிச்சை) பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் குறிப்புகள்.

------------------------------ ----------------
கையொப்பம் திகதி

தே. அ. ஔ. க. சபையின் (சிகிச்சை) பணிப்பாளரின் சிபார்சு.

------------------------------ ----------------
கையொப்பம் திகதி

அங்கீகரிக்கப்பட்டது/அங்கீகரிக்கப்படவில்லை.

--------------------------------------------- --------------------------------------------
தே. அ. ஔ. க. ச. தவிசாளரின் கையொப்பம். திகதி

5- 677/2

ச.வ.பி./ 12/2008.

**2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள்**
**(சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) சட்டம்**

அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான, 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2010, மே 04.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சிகிச்சையளித்தல் நிலையங்கள் (மதிப்பீட்டுக் குழாம்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) அமைச்சர், இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்கென மதிப்பீட்டுக் குழாம்களின் உறுப்பினராக சேவையாற்ற ஔடதங்களில் தங்கியிருத்தல் தொடர்பிலான உளவியல் அல்லது சமூகப் பிரச்சினைகள் துறையில் தோதான தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ள பத்துக்கு மேற்படாத ஆட்களை அடையாளங்கண்டு நியமித்தல் வேண்டும்.

(2) அவசியமாகவுள்ள போதெல்லாம், தே. அ. ஔ. க. ச. மதிப்பீட்டுக் குழாம்களை அமைத்துருவாக்குதல் வேண்டுமென்பதுடன் இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்கென அமைச்சரினால் நிமிக்கப்பட்ட ஆட்களிடையேயிருந்து மதிப்பீட்டு குழாமொன்றாக பணியாற்ற மூன்றுக்கு மேற்படாத ஆட்களால் பெயர் குறித்து நியமித்தலும் வேண்டும்.

3. (1) இரண்டாம் ஒழுங்குவிதியின் கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்டு அமைத்துருவாக்கப்படும் ஏதேனும் மதிப்பீட்டுக் குழாமின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) (இதனகத்துப்பின்னர் "சிகிச்சையளித்தல் நிலையம்" என குறிப்பீடு செய்யப்படும்) 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையிளித்தலும், புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தின் கீழ் பெயரிடப்பட்ட அல்லது உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் கிசிச்சை நிலையத்திற்கான அனுமதியை நாடுகின்ற ஆட்களின் ஔடதங்களில் தங்கியிருப்பானது மட்டத்தை மதிப்பீடு செய்தல் ;

(ஆ) ஏதேனும் சிகிச்சை நிலையத்திற்கான அனுமதியை நாடுகின்ற ஆட்களின் ஔடதத்திற்கான இயங்கும் சக்தி மட்டத்தை மதிப்பீடு செய்தல் ;

(இ) ஏதேனும் சிகிச்சை நிலையத்திற்கான அனுமதியை நாடுகின்ற ஆட்களின் உடன் மற்றும் உள ஆரோக்கிய நிலையை மதிப்பீடு செய்தல் ;

(ஈ) ஏதேனும் சிகிச்சை நிலையத்திற்கான அனுமதியை நாடுகின்ற ஆட்களின் குடும்ப பின்னணியை ஆய்தல்;

(உ) சிகிச்சை நிலையங்களில் சிகிச்சைகளைப் பெறுகின்ற ஆட்களை ஔடதங்களின் பாவிப்புக்களை விருப்பத்தின் மட்டம், நடத்தைகள், மாற்றங்கள், வேறு குடும்ப உறுப்பினர்களுடனான உறவுமுறைகள், சீராக்கம் மற்றும் சமூகத்தை நோக்கிய மனநிலை என்பவற்றை மதிப்பீடு செய்தல்;

(ஊ) சிகிச்சை நிலையங்களுக்கு எவரேனும் ஆளின் அனுமதி தொடர்பில் ஏதேனும் சிகிச்சையளித்தல் நிலையத்தின் பணிப்பாளருக்கு சிபாரிசு செய்தல் ;

(எ) ஏதேனும் சிகிச்சை நிலையப் பணிப்பாளருக்கு சிகிச்சை நிலையங்களிலிருந்து சிகிச்சைகளைப் பெறுகின்ற ஆட்களின் நிலையை ஒழுங்காக அறிக்கையிடுதல் ;

(ஏ) சிகிச்சை நிலையங்களால் நடாத்தப்படும் தொடரான நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் அத்தகைய சிகிச்சை நிலையங்களால் பேணப்படும். அறிக்கைகளைப் பரிசோதிப்பதுடன் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தும் நோக்கில் தே.அ. ஔ. க. சபைக்கு சிபார்சுகளைச் செய்தல் ; அத்துடன்

(ஐ) சிகிச்சை நிலையங்களிலுள்ளவர்களை விடுவிப்பதற்கென தே. அ. ஔ. க. சபையினால் உருவாக்கப்பட்டவாறான கட்டளைக் கற்கள் நிறைவேற்றப்பட்டிருப்பின் ஏதேனும் சிகிச்சை நிலையத்திலிருந்து எவரேனும் கிசிச்சை நிலையங்களிலுள்ளவர்களை விடுவிப்பதற்கு சிபாரிசு செய்தல் .

(2) தே. அ. ஔ. க. சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டு அமைத்துருவாக்கப்பட்ட ஏதேனும் மதிப்பீட்டுக் குழாம் தே. அ. ஔ க. சபையினால் அதற்கு குறித்துரைக்கப்பட்ட பணிகளை புரிந்த பின்னர் அத்தகைய குழாமின் அமைத்துருவாக்க திகதியிலிருந்து மூன்று வாரத்தினுள் அல்லது குழாமின் அமைத்துருவாகத்தின் தே. அ. ஔ. க. சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு காலப்பகுதியினுள் தே. அ. ஔ. க. சபைக்கு அத்தகைய கருமம் மீதான அதனது அவதானிப்புகளையும் சிபார்சுகளையும் செய்தல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் அறிக்கையைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

4. மதிப்பீட்டுக் குழாமொன்றின் உறுப்பினர் ஒவ்வொருவரும் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) முன்பதான அறிவித்தலின் பின்னர் நாளில் எல்லா நியாயமான நேரங்களிலும் ஏதேனும் சிகிச்சை நிலையத்தினுள் நுழைதல் ;

(ஆ) ஏதேனும் சிகிச்சை நிலையத்தில் அனுமதியை நாடுகின்ற எவரேனும் ஆளை அல்லது ஏதேனும் அத்தகைய நிலையத்தில் சிகிச்சைகளைப் பெறுகின்றவர்களைச் சோதித்தல் ;

(இ) ஏதேனும் சிகிச்சை நிலையத்தில் அனுமதியை நாடுகின்ற எவரேனும் ஆளின் அல்லது ஏதேனும் அத்தகைய நிலையத்தில் சிகிச்சை பெறுகின்றவர்களின் குடும்ப உறுப்பினர்களை நேர்முகம் காணுதல் மற்றும் ஏதேனும் அத்தகைய ஆள் அல்லது சிகிச்சை பெறுகின்றவர்களின் மருத்துவ அறிக்கை அல்லது வேறேதேனும் ஆவணத்தை பரிசோதித்தல் ; அத்துடன்

(ஈ) ஏதேனும் சிகிச்சை நிலையத்தினால் பேணப்படும் ஏதேனும் அறிக்கை அல்லது வேறு ஆவணங்களைப் பரிசோதித்தல்.

5. இரண்டாம் ஒழுங்குவிதியின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பினால், பதவி நீக்கத்தினால் அல்லது பதவியகற்றலினால் முன்னதாக பதவியை வறிதாக்கினாலொழிய அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவி நீக்கப்பட்டாலொழிய, மீள் நியமனத்திற்கு தகுதியாதல் வேண்டும்.

ஆயின், எந்த உறுப்பினரும் இரண்டு தவணைக்கு மேற்பட மீள நியமிக்கப்படுதலாகாது.

6. தே. அ. ஔ. க. சபையினால் அமைத்துருவாக்கப்பட்ட மதிப்பீட்டுக்குழாம் அத்தகைய குழாமுக்கு குறித்தொதுக்கப்பட்ட பணி தே. அ. ஔ. க. சபையின் திருப்திக்கு புரியபட்டிருக்கின்றபோது இல்லாதொழிவதாதல் வேண்டும்.

5- 677/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.